# சங்க இலக்கியங்களில் முல்லைப்பாட்டு ஓர் ஆய்வு

**ரா.கார்மலினா ராணி**
*ஆய்வியல் நிறைஞர் பட்ட மாணவி தமிழ்துறை*
*பிரிஸ்ட் நிகர் நிலைப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர்*

**முனைவர் இரா.சசிகலா**
*உதவிப் பேராசிரியர் தமிழ்த் துறை*
*பிரிஸ்ட் நிகர் நிலைப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர்*

**முல்லைப் பாட்டின் ஆய்வு**

பண்டைத் தமிழ்ச் சான்றோர்களால் இயற்றப்பட்ட சங்க காலத்துத் தமிழ் நூல்களாக கருதப் பெறுவன பாட்டும் தொகையுமாகும். பாட்டு என்றால் பத்துப் பாட்டையும், தொகை என்றால் எட்டுத்தொகை நூல்களையுமே குறிக்கும் என்பது வெளிப்படை இவ்விரு வகை நூல்களும் அளவாலும் திறதாலும் பொருளாலும் காலத்தாலும் இவ்வாறு வகைப்படுதப் படுகின்றன பெற்றன என்பர்.

இவ்விருவகை நூல்களும் பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடிகளாக விளங்குகின்றன. தமிழ் மக்களின் நாகரிகம், பண்பாடு,பழக்க வழக்கம், சமய சமுதாய நம்பிக்கைகள், அகம், புறம் ஆகிய வாழ்க்கை நெறிகள் எல்லாவற்றையும் பொதிந்து வைக்கின்ற பேழைகளாக விளங்குகின்றது.

**அகம், புறம் பாடல்**

சங்க இலக்கியஙகள் அனைத்தும் இரண்டு திணைகளால் அமைகின்றன. ஒன்று வீரமும் வீரம் சார்ந்த புறப் பாடல்கள், இரண்டு காதலும் காதல் சார்ந்த களவு கற்பு வாழ்வு குறித்த அகப் பாடல்கள் ஆகும்.

இவற்றுள் முல்லைப்பாட்டு எந்த திணையில் அமைகின்றது என்று பார்க்கும் இந்த பாடல் அகத்திணையிலும் அடக்கம், புறத்திணையிலும் அடக்கம் எனென்றால் தலைவி தலைவனைப் பிரிந்து தனிமையில் இருப்பதைப் பற்றி கூறுவதால் இப்பாடல் அகத்திணையாம் போர்களத்துப் பாசறை பற்றியும் அதில் தலவனுடைய பங்கு பற்றியும் கூறுவதால் இப்பாடல் புறதிணையாம்

முல்லைப்பாட்டு அகமும் புறமுமான திணை மயக்கத்தில் இருந்தாலும், தினணகளின் கூட்டு விகிதங்கள் சரியாய் அமைவதால், இத்திணை மயக்கமே

முல்லைப்பட்டுச் சிறப்பாய் அமைவதைக் காண்கிறோம் தலைவியின் தவிப்பை முதன்மையாகக் கொண்டு பாடல்கள் துவங்குவதால் அகதிணை சார்ந்த தலைப்பாக முல்லைப்பாட்டு அமைகின்றது.

**அகப்பொருள் நூல் சுருக்கம்**

முல்லைப்பட்டு முல்லைத் திணைக்குரிய நூல் ஆகும்.இந்நூல் அகப்பொருள் பற்றியது எனென்றால் மழைக்காலத்துக்கு முன்பு திரும்பிவருவதாகச் சொல்லிப் போருக்குச் சென்ற தலைவன் குறித்த காலத்தில் வரவில்லை தலைவியோ தலைவனின் பிரிவுத் துயரம் தாளாமல் உடல் மெலிந்து வாடுகிறாள் தலைவனை பற்றிய செய்தியினை அறிந்து வந்து தோழியின் உற்சாக அதனால் அவளின் எக்கமும் குறைவுபடவில்லை போரில் வெற்றி பெற்றத் தலைவன் திரும்பி வரும் செய்தியை கேட்ட பின்பு தான் தலைவி ஆறுதல் இன்பமும் அடைகிறாள் இந்த செய்தியை கருவாகக் கொண்டு நப்பூதனார் என்னும் புலவர் கவிநயத்தோடு எழுதியதே இம்முல்லை பாட்டாகும்.

**அறிவியல் உவமையுடன் முல்லைப்பாட்டு-**

குளிர்ந்த கடலைப் பருகி மேலெழுந்த மேகம் மலை முகடு தொட்டு பின் மழையாகிப் பொழிவது என்பது மகாபலி சக்ரவர்த்தி தாரை வார்த்த நீரானது நழுவித் தன் கையில் விழுந்த உடனேயே வானில் உயர்ந்து நின்ற அவதாரம் போன்ற ஒரு அற்புதமான அறிவியல் உவமையுடன் முல்லைப்பாட்டைத் துவக்குகிறேன்.

> ''நீர் செல நிமிர்ந்த மாஅல் போலப்
> பாடு இமிழ் பனிக்கடல் பருகி வலன் ஏர்பு
> கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி
> பெரும் பெயல் பொழிந்த சிறுபுண் மாலை
>
> 3-6 வரிகள் மு.பா

இதில் மற்றொரு நுட்பம் என்னவென்றால் முல்லை நிலத்தினுடைய பெரும் பொழுது கார்காலம், சிறுபொழுது –மாலை பாடலின் 6-வது வரியிலேயே முல்லைத்திணை விளக்கமுற ''பெரும் பெயல் பொழிந்த சிறுபுண் மாலை''

என்றவரியால் காலம் கார் என்பதையும் பொழுது மாலை என்பதையும் மிகவும் அழகு பட விளக்கி இருகிறார் இப்பாடலின் ஆசிரியர்.

**வாழ்வியல் ஒழுக்கம்**

'' செறி இலைக் காயா அஞ்சனம் மலர
முறி இனாக் கொன்றை நான் பொன் கால
கோடல் குவிமுகை அங்கை அவிழ
தொடு ஆர் தொன்றி குருதி பூப்ப
(93-96 வரிகள் மு.பா)

வாழ்வியல் தொடர்பான ஒழுக்கதைப் பற்றி விளக்குவது முல்லைப்பாட்டாகும் பண்பாடு என்பது நிலப்பண்பையும், உளப்பண்பையும் குறிக்கும் என்பதற்க்கு ஏற்ப ஐந்திணைகளை வகுத்து முல்லைப்பாட்டில் முல்லை நிலத்திற்கேற்ப வாழ்வியல் ஒழுக்கங்களை விளக்குகின்றது

**கற்பு நெறி ஒழுக்கம்**

தமிழ் இலக்கிய வரலாற்றின் பொற்காலம் என்று வருணிக்கப்பட்ட காலமும் சங்ககாலம் தான் சங்க கால மகளிரின் மாண்புகளாய் அமைந்தவை அவர்களின் பண்பட்ட அரும் பண்புகள் என்லாம். ஆணும், பெண்ணும் இணைந்து நட்த்துகின்ற இல்லற வாழ்வின் முழுப்பயனே மகளிரின் மான்பால் சிறப்புற்றது என்பர் வள்ளுவர் குறளில்

''மனைமாச்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
ஏனைமாச்சித் தாயினும் இல்'' (குறள் - 52)

வாழ்க்கைகுத்தக்க நற்பண்பு பெண்ணிடத்தில் இல்லை என்றால் வேறு எவ்வளவு சிறப்புடையதாக ஒருவனுடைய வாழ்க்கை இருந்தாலும் பயன் ஏதும் இல்லை என்று குறிகிறார்

பெண்களின் பண்புகளாகத் தொல்காப்பியர்
''உயிரினும் சிறந்தன்று நானே நாணிலும்
செயிர்சீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று''

மகளிர்க்கு உயிரைக் காட்டிலும் நாணமும் நாணத்தைக் காட்டிலும் கற்பும் சிறந்தது என்று வாழ்ந்து வந்தனர் என்பதை அறிய முடிகிறது.

பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு என இளங்கோவடிகளும் கூறுவன கற்பின் சிறப்பை நன்கு விளக்குத்லுக்காக அமைந்தன என்பதை சங்க பாடல்கள் சிலவற்றை கொண்டு எண்ணலாம்.

''பூவோடு புரையிங் கண்ணும் பேயெனப்பெயதிய
தோளும் பிறையென மதியக் குறூஉநுதலும்''

**விரிச்சி கேட்டல் பற்றிய நம்மிக்கை**

விரிச்சி கேட்டல் என்பது ஒருவகை நிமித்தம் ஆகும். நற்சொல் என்பது இதன் பொருள் ஏதேனும் ஒரு செயலின் தொடக்கத்தில் பிறர் சொல்லும் சொற்களைச் சகுனமாகச் கொள்வது உண்டு இது 'நற்சொல்' என்றும், 'விரிச்சி' என்றும் கூறப்படும் பகைவர் நாட்டிற்குள் புகுந்து பசுக்களை கவரும் முன் வெட்சி மறவர் விரிச்சி கேட்டனர் இதனை பாக்கத்து விரிச்சி என்பார் தொல்காப்பியர்.

தலைவன் பிரிவால் வருந்தினாள் தலைவி அவளைத் தேற்றுகாகவும் தலைவன் உடனே வருவானா என்பதை அறியவும் பெருமுது பெண்டிர் நாழியில் எவ்வாறு பண்பாட்டின் ஆணிவேர் சமுதாயத்தில் ஆணின் தனிதரம் உயர்வதும் தாழ்வதும் ஒரு பெண்ணின் நிலையைப் பொறுத்தே அமைகின்றது பெண்கள் இல்லற வாழ்க்கையில் சிறந்து விளங்கினார்கள். ஒவ்வொரு ஆணின் முண்ணேற்றத்திலும் பெண்கள் முக்கிய பங்கு காணப்படுகிறது.

"பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டீர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு"
"பெண்ணிற் பெருந்தகக் யாவள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்"

பதிபத்தினி என்பது மகளிர் கணவனிடத்து மாறா அன்புடையராய் அவனையே தெய்வமெனக் கொண்டு ஒழுகும் ஒழுகலாறாகும் கணவன் சொற்பிழையாது ஒழுகுதலின் அது கற்பெனவும் படும் மகளிர்க்கு உயிரினும் சிறந்தது எனவும் அதனினும் கற்புச் சிறந்தது எனவும் தொல்காப்பியர் கூறுவர்

**முடிவுரை**

முல்லைப்பாட்டு தமிழரின் கற்பு நெறி பற்றியே மிகுதியாகப் பெசுகின்ற பற்றி விளக்கப்பட்டுள்ளது விரிச்சிக்க்கேட்டல் வழக்கம் பண்டைத் தமிழரின்

வழக்கங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது முல்லைத் திணைக்குரிய இருத்தல் என்னும் உரிப் பொருளுக்கு மிகச் சிறப்பாக பொருந்தி சிறந்த பண்பாடுப் பதிவாக முல்லைபாட்டு விளங்குகின்றது.

**பார்வை நூல்கள்**


1. சுப்பிரமணியன் ச.வே (தொல்காப்பியம் முழுவதும்)
2. சாமி சிதம்பரனார் (பத்துப் பாட்டும் பண்டைத் தமிழரும்)
3. மறைமலை அடிகள் (கற்பு நெறி)
4. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் (வாழ்வியல் நெறிகள்)
5. க.வித்தியான்ந்தன், பாலசுந்தரன் (குறுந்தொகைகாட்டும் நம்பிக்கைகள்)
6. பாரதியார், பாரதிதாசன், வைரமுத்து (சதக இலக்கியங்களில் பெண்ணியம்)
7. ஆ.அந்தோணிசாமி (தமிழ் இலக்கியங்களின் வாழ்வியல் சிந்தனைகள்)